செய்தி வெளியீடு எண்: 414/2020 நாள்: 23.12.2020

**குழந்தைகள் உரிமைகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.**

இன்று (23.12.2020) குழந்தைகள் உரிமைகள் தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ‘‘எனது மகிழ்ச்சியான உலகம்’’ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 20 மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

சைல்டு லைன் 1098 மத்தியஅரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் மாநில அரசுகள், தொண்டு நிறுவனங்கள், அரசுத் துறை அலுவலகங்கள் இணைந்து குழந்தைகள் நலனுக்காக 24 மணி நேர தேசிய அளவிலான அவசர உதவிஎண் 1098 என்ற எண்ணை அறிமுகப்படுத்தி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் தடுத்தல், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல், கைவிடப்பட்ட மற்றும் தொலைந்து போன குழந்தைகளை மீட்டெடுத்தல், தனித்தோ, நோயுற்றோ இருக்கும் குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்திட சைல்டுலைன் 1098 திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் செயலாற்றி வருகிறது.

மேலும் தன்னார்வ தினத்தை முன்னிட்டு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுக்கு தன்னார்வலர் தின விழிப்புணர்வு பெயர்ப் பலகையினை மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் வெளியிட்டு தன்னார்வலர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். சைல்டுலைன் 1098 விழிப்புணர்வு பெயர்ப் பலகையினை வெளியிட்டு குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலும், அவர்களுக்கு உதவி தேவைப்படும் பொழுது அவசர இலவச தொலைபேசி எண் 1098-ஐ அழைக்க கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சைல்டுலைன் 1098 இயக்குனர் சுவாமிநாதன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மதியழகன், ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவன பொது மேலாளர் பிரேம் ஆனந்த், சைல்டுலைன் 1098 மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருபாகரன், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றும் திட்டத்தின் முதன்மை மேலாளர் மோகனவேல் உள்ளிட்ட அலுவலர்கள், தன்னார்வலர்கள், குழந்தைகள், களப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**